# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • மே 20, 2023 Weekly E-paper • May 20, 2023




## இரண்டாம் ஆண்டில்
# திராவிட நட்புக் கழகம்
## ஜூலை 9, வேலூரில்
# மத நல்லிணக்க மாநாடு

**நீதிமன்றங்களிலும் புதைபடும் சமூகநீதி**

சாரதா தேவி

**பஜ்ரங் பாலி! பா.ஜ.க காலி!**

தலையங்கம்

**தமிழ் ஒரு சூழலியல் மொழி**

நூல் அறிமுகம் - வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● மே 20, 2023 Weekly E-paper ● May 20, 2023


## இரண்டாம் ஆண்டில்

# திராவிட நட்புக் கழகம்

## ஜூலை 9, வேலூரில்

# மத நல்லிணக்க மாநாடு








இந்து,கிறிஸ்தவ, இசுலாமிய, சீக்கிய, பௌத்த மதத் தலைவர்களை ஒருங்கிணைத்து வேலூரில்ஜூலை 9ஆம் நாள் திராவிட நட்புக் கழகம் "மத நல்லிணக்க மாநாடு" நடத்த பணிகள் நடந்து வருகிறது. மத வழிபாடுதான் வேறு வேறே ஒழிய நாம் சகோதரர்கள், மனிதர்கள், மனிதநேயத்தால் ஒன்றுபட்டவர்கள்.

நம்மிடம் உள்ள மனிதநேயம், சகோதரத்துவம் எதிரிகளால் தொலைந்து போய்விடக்கூடாது. பாசிச சக்திகளின் சதிவலையில் நாம் பலியாகிவிடக்கூடாது. இந்த அடிப்படையில் இந்திய ஒன்றிய அளவிலான மதத் தலைவர்களை ஒருங்கிணைத்து, வேலூரில் ஒரு மிகப்பெரிய மாநாட்டை ஜூலை 9 ஆம் நாள் ஞாயிறு அன்று, பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களைத் தலைவராக ஏற்றுள்ள "திராவிட நட்புக் கழகம்" நடத்தவிருக்கிறது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆ. சிங்கராயர்,**
**தலைமை ஒருங்கிணைப்பாளர்**
**(திராவிட நட்புக் கழகம்)**

# நீதிமன்றங்களிலும் புதைபடும் சமூகநீதி

சாரதா தேவி

முன்னேறிய வகுப்பினருக்கு, பொருளாதாரத்தில் நலிந்ததாகக் காரணம் காட்டி கொண்டுவரப்பட்ட இடஒதுக்கீட்டுத் தீர்ப்பை மறு சீராய்வு செய்யப் போடப்பட்ட மனுவைத் தள்ளுபடி செய்திருக்கிறது ஐந்து நீதிபதிகள் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு. இந்த மாதம் 8ஆம் நாள் தள்ளுபடி செய்யப்பட்டு, 9ஆம் நாள் அதற்கான அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். இனி நீதிக்கு எந்த வாய்ப்பும் இல்லை எனும் புள்ளியில் இந்த விவாதங்களை முடித்து வைத்திருக்கிறார்கள், மாண்பமை நீதிபதிகள்!

சாதியத் தாழ்ச்சி கற்பிதங்களால், வரலாற்றில் வஞ்சிக்கப்பட்ட இந்திய நாட்டின் பெரும்பான்மை மக்களை, அதே அளவீடுகளைக் கொண்டு உயர்த்தும் நோக்கில் உருவாக்கப்பட்டவை அரசியலமைப்பின் உறுப்புகள். அரசியலமைப்பு உருவான காலத்திலிருந்தே இந்த உறுப்புகளின் நோக்கத்தைச் சிதைக்க ஒவ்வொரு வாய்ப்பிலும் முயன்று கொண்டே இருந்திருக்கிறது பார்ப்பனீயம். சமூக மற்றும் கல்வி அளவீடுகளின் படி பின்தங்கிய, பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடியின, நலிந்த மக்களை உயர்த்த, கல்வி, வேலைவாய்ப்புகளில் அரசு சிறப்பு அம்சங்கள் உருவாக்கலாம் என்று அண்ணல் அம்பேத்கர் எழுதும்போதே அதற்கு எதிர்ப்பு இருந்தது.

உறுப்பு 15 மற்றும் 16இல், கல்வி, வேலைவாய்ப்புகளில் எந்தக் காரணம் கொண்டும் பாகுபாடு காட்டக்கூடாது என்று இருந்ததை, பார்ப்பனர்கள் அவர்களுக்குச் சாதகமாக வளைத்து, இடஒதுக்கீடே அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என தீர்ப்பு வாங்கி, அதற்கு முன்பு ஒரு அரை நூற்றாண்டாக நமக்கு வெள்ளையர் கொடுத்த இடஒதுக்கீட்டை ஒழித்து விட்டார்கள். இது அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த 1950 இலேயே நடந்துவிட்டது. ஓராண்டு போராட்டத்துக்குப் பின் திருத்தம் கொண்டுவந்து மீண்டும் அரசியலமைப்பின் நோக்கத்தை தந்தை பெரியாரின் திராவிட அரசியல் மீட்டது.

1980களில் மண்டல் அறிக்கை இந்த நாட்டின் 50 விழுக்காட்டுக்கு மேல் இருக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை பரிந்துரைத்த போது, 50% மேல் மொத்த இட ஒதுக்கீடு கூடாது என்றும், அதிலும் ரூ.2.50 லட்சத்துக்கு மேல் வருமானம் பெறும் பிற்படுத்தப்பட்ட பிரிவினர் இடஒதுக்கீட்டுச் சலுகையைப் பெற இயலாது எனவும் 1992 இந்திரா சஹானி வழக்கில் தீர்ப்பு வாங்கினர். அப்போதிருந்தே, முன்னேறிய வகுப்பினருக்கு, “பொருளாதாரத்தில் பின்தங்கிய” என்ற தகுதியோடு இடஒதுக்கீட்டைப் பெற பார்ப்பனீயத்தின் அழுத்தம் எல்லா ஆட்சிகளிலும் இருந்து வந்தது.

அது, 2019இல், அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன், தோல்வி பயத்தால், பார்ப்பன முன்னேறிய வகுப்பினரை மகிழ்ச்சிப்படுத்தி, ஆட்சியைத் தக்கவைக்கும் முகமாக, அவசர அவசரமாக மக்களவையிலும், மாநிலங்களவையிலும், தி.மு.க., சி.பி.ஐ. மற்றும் ராஷ்ட்ரீய ஜனதா தளம் ஆகிய கட்சிகளின் எதிர்ப்புகளை மீறி, பொருளாதாரத்தில் நலிந்த முன்னேறிய வகுப்பினருக்கான 10 விழுக்காடு இட ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. இதில், காங்கிரஸ், சி.பி.ஐ(எம்), பாரதிய ஜனதா, அதி.மு.க. பகுஜன் சமாஜ் என அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்தது தற்செயலானது அல்ல. பார்ப்பனிய மேலாதிக்கத்துக்கு உட்பட்ட அவர்களின் அரசியலின் வெளிப்பாடுதான் அது. கம்யூனிஸ்ட், காங்கிரஸ் என எல்லாக் கட்சிகளின் நிழல்களுக்குள்ளும், பார்ப்பனிய நிஜங்களே மறைந்து கொண்டுள்ளன.



இந்நாட்டில் மூன்றே விழுக்காடு இருக்கும் பார்ப்பனர்கள், விடுதலை அடைந்து 75 ஆண்டுகள் ஆன பின்பும், 7 பத்தாண்டுகள் இங்கு பட்டியலின, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இடஒதுக்கீடு கொள்கையளவிலாவது இருந்த பின்பும், இன்றளவும் 80% உயர் பொறுப்புகளை அமைச்சகத்திலும், அரசுத் துறையிலும், தனியார் துறையிலும், நீதிமன்றங்களிலும், ஊடகத் துறையிலும், தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள். இருப்பினும், அவர்கள் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் என ஒரு பிரிவை உண்டாக்குகிறார்கள். அதில் கவனமாக பட்டியலின, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை வெளியேற்றுகிறார்கள்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ரூ.2.50 லட்சத்துக்கு மேல் வருமானம் இருந்தால், அவர்கள் இடஒதுக்கீட்டுச் சலுகைக்குள் வரக்கூடாது என வாதிட்டவர்கள், தங்களுக்கு ரூ.8 லட்சம் வரை வருமான உச்ச வரம்பை நிர்ணயித்துக்கொள்கிறார்கள். “நலிந்த” என்ற பதத்தின் பொருளையே மாற்றத் துணிந்து, அவர்களுக்கிடையே அப்படியான ஒரு பிரிவு இல்லாமல் போனாலும் சலுகை கிடைப்பதை உறுதி செய்துகொள்கிறார்கள். அதுவரை அண்ணல் அம்பேத்கரைக் கூட தகுதி, திறமை பாதித்துவிடக்கூடாது என எண்ணவைத்த அவர்கள், தங்கள் தகுதி, திறமை குறித்தெல்லாம் கிஞ்சித்தும் கவலை கொள்ளாமல், தகுதி மதிப்பெண்களை, பழங்குடியின மக்களை விட கீழானதாக குறைத்துக் கொள்கிறார்கள்.

இவ்வளவு, தில்லுமுல்லுகள் செய்து தங்களைத் தக்கவைத்துக்கொள்ள, அல்லது விடுபட்டுவிடாமல், அவர்களில் அனைவரும் கல்வி, வேலைவாய்ப்புகளில் தங்கள் நிலையில் இருந்து சரிந்துவிடாமல் செய்யும் முனைப்புகளை ஒரு சிறு கூச்சமோ, சுயவிமர்சனமோ இல்லாமல், எல்லா நீதிமன்றங்களும், எல்லா நீதிமான்களும், அவர்களுடைய எல்லா ● எழுத்துகளும் சரியென்று தீர்ப்பு எழுதுகின்றன. பார்ப்பனர்கள் தங்கள் நலன்களைப் பின்னுக்குத் தள்ளி எந்த நீதியையும் வழங்கிவிடமாட்டார்கள் என நாம் அறுதியிட்டுக் கூறலாம்.

இந்தக் களநிலவரத்தை, பார்ப்பனியச் சூதை எப்படி எதிர்கொள்வது? உலகில் எல்லா ஒடுக்குமுறையாளர்களும் திருந்திவிடுகிறார்கள்.

திருந்துவதோடு மட்டுமல்லாமல், தங்கள் முன்னோர் இழைத்த வரலாற்று ஒடுக்குமுறையின் குற்ற உணர்வை அடுத்தடுத்த தலைமுறையினர் சுமக்கிறார்கள். அதற்கான பிராயச்சித்தம் தேடுகிறார்கள். அவர்களுக்கு அந்த குற்ற உணர்வை, ஒடுக்கபட்ட மக்கள் தங்கள் செயல்பாடுகளால் கொடுத்துள்ளார்கள். நாம் தான் இன்னமும் அவர்களுக்கு அந்த குற்ற உணர்வை ஏற்படுத்தாமல் அவர்களோடு சமரசமாகிப் போகிறோம்.

இந்த உளவியல் சமரசத்திலிருந்து வெளியேறி, வேகமாகவும், பரவலாகவும், உறுதியோடும் அதிகாரப் பீடங்களை நோக்கி இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களான உழைக்கும் பட்டியலின, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மதச் சிறுபான்மையின மக்கள் நகர வேண்டும். அமைச்சு, அரசு, நீதிமன்ற, ஊடகத் தூண்கள் நம்மால் வலிமை பெறும் நாளிலேயே இந்தக் கேடுகளை நம்மால் களைய முடியும். ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## பஜ்ரங் பாலி! பா.ஜ.க காலி!

“பஜ்ரங் பாலி, பாலி “ என்று முழக்கம் போட்டார் மோடி. “பா.ஜ.க காலி, காலி “ என்று ஓட்டு போட்டு விட்டார்கள் கர்நாடக மக்கள்.

இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சித் தலைவர்களின், தொண்டர்களின் உழைப்பு மகத்தானது. ராமன் அணில் முதுகில் மூன்று கோடுகள் போட்ட கதைபோல, பா.ஜ.க நெற்றியில் மூன்று கோடுகளைப் போட்டு அனுப்பி விட்டார்கள் கர்நாடக மக்கள்.

காங்கிரசின் இந்த வெற்றி ஒன்றியம் முழுதும் அதிர்வை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை காங்கிரஸ் அல்லாத கூட்டணி அமைக்க வேண்டும் என்று சொன்னவர்களுள் ஒருவரான மம்தா பானர்ஜியின் பிடிவாதம் தளர்ந்து விட்டது.

2024 பொதுத் தேர்தலில் “காங்கிரஸ் வலுவுள்ள இடங்களில் நாங்கள் அவர்களை ஆதரிக்கிறோம். அதுபோல் அவர்கள் எங்களை ஆதரிக்க வேண்டும்” என்று அறிவித்துவிட்டார் மம்தா பானர்ஜி. கெஜ்ரிவாலும், சந்திரசேகரராவும் விரைவில் மம்தாவின் முடிவுக்கு வந்து விட வாய்ப்பு இருக்கிறது.

ஒன்றியத்தின் தென் மாநிலங்களில் இருந்து பா.ஜ.க துடைத்து எறிந்ததைப் போல வடக்கிலும் சில பகுதிகளில் அது வலுவிழந்துள்ளது என்பதை மறுப்பதற்கு இல்லை. அதற்காக அக்கட்சியை எளிதாக எண்ணி விடக் கூடாது.

மக்கள் நலன் என்று சொல்லிக் கொண்டு, மதவெறி, இந்துத்துவம் என்ற மதச் சித்தாந்தத்தைப் பல்வேறு வழிகளில் முன்னெடுக்க பா.ஜ.க தயங்காது. அதற்கு எதிராக திராவிடச் சித்தாந்தமாகிய சமூக நீதியை ஒன்றியம் முழுவதும் மக்களிடம் கொண்டு போக வேண்டும்.

மிக முக்கியமாக எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர வேண்டும். தி.மு.க தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் இதற்கான முன்முயற்சியை டில்லியில் எடுத்தார். அப்போது

ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட், ஜார்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் ஆகியோர் துணை நின்றனர்.

முதல்வர் ஸ்டாலினின் 70 ஆம் பிறந்த நாளில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே, ஃபரூக் அப்துல்லா, அகிலேஷ் யாதவ் உள்ளிட்ட எதிர்கட்சித் தலைவர்கள் 2024 தேர்தலை நினைவூட்டுவதைப் போலக் கரம்கோத்து நின்றார்கள். நிதிஷ் குமார் எதிர் கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசி வருகிறார்.

காலம் அதிகம் இல்லை. காலம் கனிந்து வருகிறது. தேன்கூடு கலைந்து விடக் கூடாது. காங்கிரஸ் அல்லாத 3ஆம் கூட்டணி கவைக்கு உதவாது.

“பா.ஜ.க காலி, காலி “ என்று இந்திய ஒன்றியம் முழுவதும் ஓட்டு போடும் அந்த நாள் எதிர்கட்சிகளின் கைகளில், அவைகளின் ஒன்றிணைவில் இருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408







21.05.2023 – ஞாயிறு – மாலை 4 மணி – மான்செஸ்டர் (UK)

# தமிழ் ஒரு சூழலியல் மொழி

நூல் அறிமுகம்

வெற்றிச்செல்வன்

உயிரினங்களுக்கான அறிவியல் பெயரை, இலத்தீன் மொழியில் சூட்டுவது மரபு. இது உயிரியலாளர் கார்ல் லின்னேயஸ் வகுத்த முறை. சில நேரங்களில் உயிரினம் கண்டறியப்பட்ட இடத்தின் பெயரையோ, கண்டுபிடித்தவரின் பெயரையோ இணைத்துச் சூட்டுவது வழக்கம். ஆனால், மேற்குத் தொடர்ச்சி மலையில் புதிதாக இரு தவளைகளைக் கண்டறிந்தபோது அவற்றுக்குச் சமஸ்கிருதப் பெயர்கள் சூட்டப்பட்டன *(Nasikabatrachus sahyadrensis and Philautus neelannethrus)*. இது மரபை மீறிய செயல். சரி இருக்கட்டும், தவளைகளைக் கண்டறிந்த ஆய்வாளர்கள் ஒருவேளை மரபை மீற நினைத்திருந்தால், தம் தாய்மொழியான மலையாளத்திலோ, கன்னடத்திலோ இல்லையெனில் திராவிட மொழிக்குடும்பத்தின் மூத்த மொழியான தமிழிலோ பெயர் வைத்திருக்கலாமே, ஏன் சமஸ்கிருதம்?




சமஸ்கிருதம் எவ்வளவு நுட்பமாக ஊடுருவுகிறது பார்த்தீர்களா ? இது போன்ற பல செய்திகளைச் சான்றுகளோடும், பகுத்தறிவுப் பார்வை கொண்டும் நமக்கு விளக்கும் முகமாக வெளிவந்துள்ளது, எழுத்தாளர் நக்கீரன் அவர்களின் “தமிழ் ஒரு சூழலியல் மொழி” என்னும் நூல்.

ஒரு மொழியின் இலக்கியங்களில் சூழலியல் இருக்கும். ஆனால் இலக்கணமே சூழலியலாக இருப்பது தமிழ். அதை அமைத்துத் தந்தது தொல்காப்பியம் என்கிறார் நூலின் ஆசிரியர். இந்தச் செய்தியை பள்ளிச் சிறார்களுக்கும் புரியும் பாங்கில் எடுத்துரைத்திருப்பது இந்நூலின் சிறப்பு.

கோயில்களில் உள்ள ‘யாளி’ டைனோசரா? அன்னப் பறவை இந்தியப் பறவையா ? அது பாலையும் நீரையும் தனியே பிரிக்குமா? இலக்கியத்தில் காணப்படும் செங்கால் நாரை என்பது எந்தப் பறவை ? ஆகிய கேள்விகளுக்கு இலக்கியம், அறிவியல், புவியியல் என்னும் மூன்றின் வாயிலாகவும் விடையளிக்கப் பட்டிருக்கும் விதம் சுவையானது.

இயற்கையின் தோற்றத்திற்குக் காரணம் கடவுள் என்ற கருத்து, தொல்தமிழ் இலக்கியங்களில் இல்லை. தொல்காப்பியத்தில் மதம், சமயம் போன்ற சொற்களே இல்லை என்னும் செய்திகள், தமிழை இந்து மதத்திற்குள் அடைக்க முயலும் ஆரியத்துக்குச் சரியான பதிலடி. தெய்வம் என்பது உணவு, விலங்கு, மரம், பறவை, தொழில் ஆகியவற்றுக்கு இணையாகவே வைக்கப்படுகிறது என்பதைத் தொல்காப்பியத்தின் துணை கொண்டு விளக்கியிருப்பது, தமிழரின் வாழ்வியலை நமக்கு உணர்த்துகிறது.

சமஸ்கிருதம் ஆதிக்கம் செலுத்தும் மொழியாக, பூசனை மொழியாக, தெய்வீக மொழியாக இருப்பதுதான் இங்கு பிரச்சினையே தவிர, அது ஒரு மொழியாக இருப்பதில் எந்தவொரு சிக்கலும் தமிழுக்கு இல்லை என்ற உண்மையை எடுத்துரைப்பதோடு, மும்முனைத் தாக்குதலை நமது தமிழ்மொழி எதிர்கொண்டுள்ளதைப் பகுப்பாய்வு செய்துள்ளது, இந்நூலின் தனித்தன்மை.

பண்பாட்டு மேலாதிக்கத்திற்கு முனையும் சமஸ்கிருதம் ஒருபுறம், அரசியல் மேலாதிக்கத்திற்கு முனையும் இந்தி ஒருபுறம், பொருளாதார மேலாதிக்கத்திற்கு முனையும் ஆங்கிலம் ஒருபுறம் என்ற மும்முனைத் தாக்குதல் குறித்து கவனப்படுத்தியிருப்பதோடு, மொழிப் பன்மயத்தின் தேவையை உணர்த்தி, ஒரே நாடு, ஒரே மொழி என்ற சிந்தனை எவ்வளவு பைத்தியக்காரத்தனமானது என்பதை மொழி அழகியலோடு உணர்த்தியுள்ள இந்நூல், மொழியியல் சிந்தனைகளை அறிந்து கொள்ள விரும்பும் அனைவரும் படிக்கவும், கற்றுத் தெளியவும் உதவும் நூல். ●

நூலின் பெயர் : **தமிழ் ஒரு சூழலியல் மொழி**
ஆசிரியர் : **நக்கீரன்**
வெளியீடு : **காடோடி பதிப்பகம்**
விலை : **ரூ.190**

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian